# ஃபியுச்சர் புரொடெக்டர் ஸ்மார்ட்
# IPID _ தமிழ்
# குறிப்பு இலக்கம் - IPID(TM)-0015

கோப்லைஃப் இன்சூரன்ஸ் லிமிடட். கம்பனிப் பதிவிலக்கம் –PB5116
கோப் ஹவுஸ், இலக்கம் 455, காலி வீதி, கொழும்பு 03

தொடர்பு இலக்கம் - 011 2556 567 வட்ஸ்அப்: 0711 591 111 மின்னஞ்சல்: info@cooplife.lk , inquiry.life@coopinsu.com இணையதளம்: www.cooplife.lk
கோப்லைஃப் இன்சூரன்ஸ் லிமிடட், இலங்கை காப்புறுதி ஒழுக்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவால் (IRCSL) உரிமம் பெற்றது.
பதிப்பு 1.0 தமிழ்

காப்புறுதித் திட்டம் பற்றிய தகவல் ஆவணம்

# ஃபியுச்சர் புரொடெக்டர் ஸ்மார்ட் திட்டம்

காப்பீடு, அனுகூலம் மற்றும் மன அமைதிக்கான உங்கள் முழுமையான வழிகாட்டி

கோப் லைஃப் இன்சூரன்ஸ் லிமிடெட் உடனான உங்கள் "ஃபியுச்சர் புரொடெக்டர் ஸ்மார்ட் ஆயுள் காப்புறுதிப் பத்திரம்" பற்றிய முக்கியத் தகவல்களை உங்களுக்கு வழங்குவதற்காக இந்தக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது உங்கள் காப்புறுதிப்பத்திரத்தின் மூலம் அதிகபட்ச அனுகூலங்களைப் பெறுவதற்கு நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் பற்றி உங்களுக்கு வழிகாட்டும் எளிமைப்படுத்தப்பட்ட ஒரு பதிப்பாகும்.

## 1. ஃபியுச்சர் புரொடெக்டர் ஸ்மார்ட் காப்புறுதித் திட்டம் என்றால் என்ன?

ஃபியுச்சர் புரொடெக்டர் ஸ்மார்ட் ஆயுள் காப்புறுதித் திட்டம் என்பது, வாழ்க்கையின் எதிர்பாராத தருணங்களில் உங்களுக்கு ஆதரவளிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு பொதுவான, நிதி அடிப்படையிலான காப்புறுதித் திட்டமாகும். இது ஒரே திட்டத்தில் சேமிப்பை உருவாக்கவும், பாதுகாப்பாக இருக்கவும், உங்கள் ஆரோக்கியத்தைப் பேணவும், உங்கள் ஓய்வு காலத்திற்காக நம்பிக்கையுடன் திட்டமிடவும் உதவுகிறது.

### 1.1 ஃபியுச்சர் புரொடெக்டர் ஸ்மார்ட் ஆயுள் காப்புறுதிப் பத்திரத்தின் சிறப்பம்சங்கள்

- இது ஆயுள் பாதுகாப்பை சேமிப்புடன் இணைக்கும் ஒரு நெகிழ்வான ஓர் ஆயுள் காப்புறுதித் திட்டமாகும். உங்கள் பாதுகாப்பு மற்றும் நிதி நோக்கங்களின் அடிப்படையில், அனுமதிக்கப்பட்ட வரம்புகளுக்குள் நீங்கள் விரும்பும் அளவிலான ஆயுள் காப்பீட்டைத் தேர்ந்தெடுக்கலாம்.
- இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் 5 ஆண்டுகளுக்கு மட்டுமே கட்டுப்பணம் செலுத்த வேண்டும். அதே நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10, 15 அல்லது 20 வருட காப்புறுதிக் காலத்திற்கு ஆயுள் காப்புறுதிப் பாதுகாப்பை வழங்குகிறது.
- இந்த அமைப்பானது, காப்புறுதிதாரர்கள் தங்கள் கட்டுப்பணம் செலுத்துதலைக் குறுகிய காலத்திற்குள் முடிக்கவும், அதே நேரத்தில் நீண்ட காலத்திற்கு ஆயுள் காப்புறுதிப் பாதுகாப்பை தொடர்ந்து அனுபவிக்கவும் உதவுகிறது.
- காப்புறுதிப்பத்திரக் காலவரையின் போது காப்புறுதி செய்யப்பட்டவர் மரணித்தால், செலுத்தப்பட வேண்டிய அனுகூலம் பின்வருவனவற்றில் கூடிய தொகையாக இருக்கும்:
  - அடிப்படைக் காப்புறுதித் தொகை: அல்லது
  - மரணம் நிகழ்ந்த திகதியில் நிலவும் நிதிப் பெறுமதி
- காப்புறுதி செய்யப்பட்டவர் முதிர்வுறும் திகதி வரை உயிருடன் இருந்தால், முதிர்வுத் திகதியிலுள்ள முதலீட்டு நிதிப் பெறுமதி செலுத்தப்படும்.
- கம்பனியால் அறிவிக்கப்படும் இலாபப்பற்கு விகிதத்தின் அடிப்படையில், வருடாந்தம் இலாபப்பங்குத் தொகை நிதியில் வரவு வைக்கப்படலாம். இலாபப்பங்குத் தொகைகள் உத்தரவாதமளிக்கப்பட்ட ஒன்றல்ல, மாறாக அவை, கம்பனியின் செயல்திறன் மற்றும் பொருந்தக்கூடிய ஒழுங்குமுறைத் தேவைகள் ஆகியவற்றைப் பொறுத்ததாகும்.

### 1.2 ஃபியுச்சர் புரொடெக்டர் ஸ்மார்ட் ஆயுள் காப்புறுதித் திட்டத்தின் வரையறைகள்

| காப்புறுதிப்பத்திரத்தின் வரையறைகள் ஒரே பார்வையில் | |
|---|---|
| இணைகையில் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வயது | 18–65 வருடங்கள் |

| | |
|---|---|
| முதிர்வின் போது அதிகபட்ச வயது | 70 வருடங்கள் |
| குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச அடிப்படைக் காப்புறுதித் தொகை | குறைந்தபட்சம்: ரூ 100,000 \| அதிகபட்சம்: வரையறை கிடையாது |
| கட்டுப்பணம் செலுத்தும் முறை | மாதாந்தம் \| காலாண்டு \| அரையாண்டு \| வருடாந்தம் (தொடர் கட்டுப்பணம்) |
| குறைந்தபட்ச அடிப்படைக் கட்டுப்பணம் | வருடாந்தம்: ரூ 30,000 \| அரையாண்டு: ரூ 15,000 \| காலாண்டு: ரூ 7,500 \| மாதாந்தம்: ரூ 2,500 |
| காப்புறுதிப்பத்திர காலவரை | குறைந்தபட்சம்: 10 வருடங்கள் \| அதிகபட்சம்: 20 வருடங்கள் |
| கட்டுப்பணம் செலுத்தும் காலவரை | குறைந்தபட்சம்: 5 வருடங்கள் |

# 2 அடிப்படை காப்புறுதிக் காப்பீட்டின் சுருக்கம்

## 2.1 காப்பீடு செய்யப்படும் முக்கிய அபாயவாய்ப்பு

| அனுகூல வகை | விளக்கம் |
|---|---|
| மரண அனுகூலங்கள் | மரணத்தின் போது: காப்புறுதித் தொகை அல்லது மரணம் சம்பவித்த திகதியில் இருக்கும் நிதிப் பெறுமதி ஆகிய இவற்றில் எது அதிகமோ அத் தொகை உங்களுக்கு வழங்கப்படும். (மேலதிக விபரங்களுக்கு முதலாம் அட்டவணை, பகுதி 2 ஐப் பார்க்கவும்) |
| முதிர்வு அனுகூலங்கள் | முதிர்வுத் திகதியில் நிலவும் நிதிப் பெறுமதி உங்களுக்கு செலுத்தப்படும். (முதலீட்டு ஒதுக்கீட்டு விகிதங்களை அறிய முதலாம் அட்டவணையின் பகுதி 03 ஐப் பார்க்கவும்) |

## 2.2 ரைடர் காப்பீடுகள் - மேலதிக காப்பீட்டுத் தெரிவுகள்

உங்கள் ஃபியுச்சர் புரொடெக்டர் ஸ்மார்ட் ரைஃப் ஆயுள் காப்புறுதிப் பத்திரத்தில் அதன் குறிப்பிட்ட நிபந்தனைகள், விதிமுறைகள் மற்றும் விலக்குகளுடன் தனிப்பயனாக்கப்பட்ட (customized) பாதுகாப்பை வழங்கும் என்னென்ன மேலதிக ரைடர் காப்பீடுகளை நீங்கள் சேர்க்கலாம்?

| மேலதிக அனுகூலங்கள் | விளக்கம் | அட்டவணை இல. |
|---|---|---|
| மேலதிக மரண அனுகூலம் | மேலதிக ஆயுள் அனுகூலம் என்பது, குறைந்த கட்டுப்பணத்திற்கு மேலதிக ஆயுள் காப்பீட்டை வழங்குவதாகும். உங்கள் காப்புறுதிப்பத்திரம் அமுலில் இருக்கும் போது மரணம் ஏற்பட்டால் இழப்பீடு வழங்கப்படும். | 03 |
| விபத்து மரண அனுகூலம் (விபத்து அனுகூலப் பொதி) | உங்கள் காப்புறுதிப்பத்திரம் அமுலில் இருக்கும் போது விபத்தின் காரணமாக மரணம் ஏற்பட்டால் விபத்து மரண அனுகூலம் மேலதிக காப்பீட்டை வழங்கும். | 04 |

| | | |
|---|---|---|
| **பூரண நிரந்தர இயலாமை அனுகூலம்** (TPD) **(விபத்து அனுகூலப் பொதி)** | விபத்து அல்லது நோயின் காரணமாக ஏற்படும் பூரண நிரந்தர இயலாமையின் போது இந்த அனுகூலத் தொகை 10 ஆண்டுகள் வரை வருடாந்தம் வழங்கப்படும். | **04** |
| **பகுதி நிரந்தர இயலாமை அனுகூலம்** (PPD) **(விபத்து அனுகூலப் பொதி)** | விபத்துக் காயத்தால் பட்டியலிடப்பட்ட இழப்பு ஏற்பட்டால் அந்த இழப்பிற்கான காப்புறுதித் தொகையின் சதவீதத்தின் அடிப்படையில் நீங்கள் பணம் பெறுவீர்கள். (உப-பிரிவு 3.2.3 இன் கீழுள்ள அட்டவணையைப் பார்க்கவும்) PPD அனுகூலமானது தேர்ந்தெடுக்கப்பட்ட விபத்து மரண அனுகூல காப்புறுதித் தொகையில் 50% ஆகவும் (மற்றும் அதற்கேற்ப TPD காப்புறுதித் தொகையில் 50% ஆகவும்) கட்டமைக்கப்பட்டுள்ளது. | **04** |
| **உயிராபத்து நோய் அனுகூலம்** | காப்புறுதிப்பத்திரக் காலவரையின் போது காப்புறுதி செய்யப்பட்ட உயிராபத்து நோய்களால் நீங்கள் பாதிக்கப்பட்டாலோ அல்லது அறுவைசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டாலோ உயிராபத்து நோய்க் காப்பீட்டுக்கு ஏற்புடைய முழுக் காப்புறுதித் தொகையையும் (என்ஜியோப்ளாஸ்டியாயின், அதிகபட்சம் ரூ. 1 மில்லியக் வரை 50%) நாம் உங்களுக்கு வழங்குவோம். விபத்துகளைத் தவிர, 90 நாட்கள் காத்திருப்புக் காலத்திற்குப் பிறகு (என்ஜியோப்ளாஸ்டியாயின், 365 நாட்கள்) இந்த அனுகூலம் தொடங்கும். மேலும் பணத்தைப் பெறுவதற்கு, நோய் கண்டறியப்பட்ட பிறகு நீங்கள் 30 நாட்கள் வரை உயிர் பிழைத்திருக்க வேண்டும். உயிராபத்து நோய் அனுகூலத்தின் கீழ் 36 வகை உயிராபத்து நோய்கள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. (காப்பீடு செய்யப்பட்டுள்ள உயிராபத்து நோய்களின் முழுமையான பட்டியலுக்கு காப்புறுதி ஆவணத்தின் பிரிவு 3.3 ஐப் பார்க்கவும். அல்லது வேண்டுகோள் விடுக்கப்பட்டால் வழங்கப்படும்). | **05** |
| **மருத்துவமனைப்படுத்தல் அனுகூலம்** | நோய் அல்லது விபத்து காரணமாக நீங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால், இந்த அனுகூலம் வழங்கப்படும். காப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி நீங்கள் தேர்ந்தெடுத்த நாளாந்த வீதத்தில் அனுகூலம் வழங்கப்படும். விபத்துகளைத் தவிர, காப்புறுதி தொடங்கியதில் / புதுப்பித்ததில் இருந்து 90 நாட்கள் காத்திருப்புக் காலம் ஏற்புடையதாகும். | **06** |
| **சத்திரசிகிச்சை அனுகூலம்** | காப்புறுதிப்பத்திரத்தின் "காப்பீடு செய்யப்பட்டுள்ள அறுவைசிகிச்சை முறைகள்" என்பதன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள அறுவைசிகிச்சைக்கு நீங்கள் உட்பட்டால், உண்மையான மருத்துவச் செலவுகளைப் பொருட்படுத்தாமல் உங்கள் அறுவைச்சிகிச்சை அனுகூல காப்பீட்டுத் தொகையின் ஓர் சதவீதமாக ஒரு நிலையான அனுகூலத் தொகையைப் பெறுவீர்கள். (காத்திருப்புக் காலம் பிரயோகிக்கப்படும்). இந்த அறுவைசிகிச்சை அனுகூலம் பெரியவர்களுக்காக 250 அறுவைசிகிச்சை முறைகளை உள்ளடக்கியது. சிறுவர்களுக்கான காப்புறுதிப்பத்திரங்களைப் பொறுத்தளவில், அறுவைசிகிச்சை அனுகூலத்தின் கீழ் பிரத்தியேக 250 அறுவைசிகிச்சை முறைகள் ஏற்புடையதாகும் | **27** |
| **இறுதிச்சடங்குகள் அனுகூலம்** | செய்யப்பட்டவரின் மரணத்தின் போது காப்புறுதிப் பத்திரம் முழுமையாக செல்லுபடியாகும் தன்மையில் இருந்தால், காப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி இறுதிச்சடங்குகள் செலவு அனுகூல காப்புறுதித் தொகைக்கு சமமான ஒரு மேலதிக தொகையைக் கம்பனி செலுத்தும். | **07** |
| **வாழ்க்கைத்துணை மேலதிக காப்பீடுகள்** | வாழ்க்கைத்துணைக்கான மேலதிக காப்பீடுகளைப் பெறுவதன் மூலம், இந்தக்<br><br>விபத்து அனுகூலப் பொதி, உயிராபத்து நோய்க் காப்பீடு, சத்திரசிகிச்சைக் அனுகூலம், இறுதிச்சடங்கு செலவுகள் அனுகூலம் மற்றும் மருத்துவமனைப்படுத்தல் அனுகூலம் போன்ற மேலதிக அனுகூலங்களைச் சேர்ப்பதன் மூலம் வாழ்க்கைத்துணைக்கான காப்பீட்டை அதிகரிக்கலாம். காப்புறுதிப்பத்திர விதிமுறைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட காப்புறுதித் தொகைகளுக்கு உட்பட்டு இந்த அனுகூலங்கள் பிரதான ஆயுளுக்கு வழங்கப்படும் அனுகூலங்களைப் போலவே இருக்கும். | **09** |
| **பிள்ளைக்கான மருத்துவமனைப் பண அனுகூலம்** | 18 வயதுக்கு கீழ்ப்பட்ட 4 பிள்ளைகள் இந்தக் காப்பீட்டின் கீழ் சேர்க்கப்படலாம். | **22** |
| **பிள்ளைக்கான சத்திரசிகிச்சை அனுகூலம்** | 21 வயதுக்கு கீழ்ப்பட்ட 4 பிள்ளைகள் இந்தக் காப்பீட்டின் கீழ் சேர்க்கப்படலாம். | **27** |

குறிப்பு: மேலதிக அனுகூலங்கள் போனஸ், முதிர்வுப் பெறுமதி அல்லது கையளித்தல் பெறுமதி கணிப்புகளில் உள்ளடக்கப்படவில்லை.

## 3 காப்புறுதிப்பத்திரத்தின் முக்கிய அம்சங்கள்

தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் சம்பந்தப்பட்ட பிரிவுகளைப் பார்க்க.

<table>
<tr><th>தலைப்பு</th><th>விளக்கம்</th></tr>
<tr><td>சலுகைக் காலம்</td><td>கட்டுப்பணம் செலுத்த வேண்டிய திகதிக்குப் பிறகும் உங்கள் காப்புறுதி அனுகூலங்களை இழக்காமல் கட்டுப்பணத்தைச் செலுத்த உங்களுக்கு 30 நாட்கள் கலுகைக் கால அவகாசம் உள்ளது.</td></tr>
<tr><td>அனுமதிக்கப்பட்ட திருத்தங்கள்</td><td>காப்புறுதிக் காலவரையின் போது நீங்கள் மாற்றக்கூடியவை;<br>எந்த நேரத்திலும்: பெயர் திருத்தம், பயனாளி மாற்றம், முகவரி மாற்றம்<br>காப்புறுதி ஆண்டு நிறைவின் போது மட்டும்: கட்டுப்பணம் செலுத்தும் முறை, காப்புறுதித் தொகை மாற்றம், மேலதிக காப்பீடுகளை சேர்த்தல்/நீக்குதல், வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகளை சேர்த்தல்/நீக்குதல்</td></tr>
<tr><td>செயலிழந்த உங்கள் காப்புறுதியை மீளப் புதுப்பிக்கலாம்</td><td>சாதாரண புதுப்பித்தல் - செலுத்தப்படாத முதல் கட்டுப்பணத் திகதியில் இருந்து 6 மாங்களுக்குப் பிறகு, (செயலிழந்த காலம் 5 வருடங்களுக்கும் குறைவாக) முதிர்வுத் திகதிக்கு முன்பு; தாமதக் கட்டணம் + நிலுவைத்தொகை + மருத்துவச் செலவுகளை செலுத்தவும்.<br><br>விசேட புதுப்பித்தல் - திருத்தப்பட்ட விதிமுறைகளின் கீழ் மாதாந்த காப்புறுதிப்பத்திரத்திற்கு விசேட புதுப்பித்தல் கட்டணம் ரூ. 250 + கட்டுப்பணம் செலுத்தும் முறை மாதாந்தமாயின் 3 கட்டுப்பணங்கள் + (மற்ற முறைகளுக்கு) திருத்தப்பட்ட விதிமுறைகளின் கீழ் ஒரு கட்டுப்பணம்.<br><br>நீடிக்கப்பட்ட விசேட புதுப்பித்தல் - விசேட புதுப்பித்தல் கட்டணம் ரூ. 250 + கட்டுப்பணம் செலுத்தும் முறை மாதாந்தமாயின் 3 கட்டுப்பணங்கள் + (மற்ற முறைகளுக்கு) திருத்தப்பட்ட விதிமுறைகளின் கீழ் ஒரு கட்டுப்பணம் (கையளித்தல் பெறுமதி சேர்ந்துள்ள காப்புறுதிப்பத்திரங்கள்)</td></tr>
<tr><td>முன்கூட்டியே வெளியேறுவதற்கான செலவு; கையளித்தல் பெறுமதி</td><td><ul><li>3 வருடங்கள் நிறைவடைந்த பிறகு கிடைக்கும்: (காலவரை 10 வருடங்களுக்குக் கூடிய)</li><li>செலுத்த வேண்டிய தொகை:</li></ul>கீழே குறிப்பிடப்பட்டுள்ள கையளித்தல் கட்டணத்திற்கு உட்பட்டு, கையளிக்கப்பட்ட திகதியில் நிலவும் சேமிப்பு நிதியம்.<br><table><tr><th>காப்புறுதி ஆண்டு</th><th>செலுத்தப்பட்டுள்ள மொத்த கட்டுப்பணங்களின் ஒரு விகிதாசாரமாக கையளித்தல் கட்டணம்</th></tr><tr><td>1 தொடக்கம் 3</td><td>100%</td></tr><tr><td>4 மற்றும் அதுக்கு மேல்</td><td>குறைந்தபட்சம் {20%,0.5*[1-(செலுத்தப்பட்ட கட்டுப்பணங்கள்/மொத்த கட்டுப்பணங்கள்)]}</td></tr></table></td></tr>
<tr><td>காப்புறுதிரக் கட்டணம்</td><td>முதலாம் கட்டுப்பணத்துடன் மாத்திரம் ரூ 750 அறவிடப்படும்.</td></tr>
</table>

| | |
|---|---|
| காப்புறுதி மீதான கடன் | கையளித்தல் பெறுமதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் நிதிப் பெறுமதியின் 75 சதவீதத்தை கடனாகப் பெற்றுக் கொள்ளலாம். |
| இரத்துச்செய்யும் உரிமை | காப்புறுதிப்பத்திரம் வழங்கப்பட்ட திகதியில் இருந்து **21 நாட்களுக்குள்** காப்புறுதி ஆவணத்தை திருப்பி அனுப்புவதன் மூலம் உங்கள் காப்புறுதிப்பத்திரத்தை இரத்துச் செய்யலாம். |

பொதுவான நிபந்தனைகள் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து காப்புறுதி ஆவணத்தின் 5-9 ஆம் பக்கங்களைப் பார்க்க.

## 4 காப்பீடு வழங்கப்படாதவை (விலக்குகள்)

உங்கள் அனுகூலங்களை செலுத்த எம்மால் முடியாது போகும் சில சம்பவங்கள் / நிகழ்வுகள் (விலக்குகள்) உள்ளன:

| ⚠உங்கள் உரிமைக்கோரலை நாம் செலுத்த முடியாத சந்தர்ப்பங்கள் | |
|---|---|
| தற்கொலை | காப்புறுதியைத் தொடங்கிய அல்லது புதுப்பித்த ஒரு வருடத்திற்குள் உங்கள் சொந்தச் செயலால் (தற்கொலை) மரணம் ஏற்பட்டால், எந்த இழப்பீடும் வழங்கப்படாது. |
| போர் அல்லது சிவில் கலவரம் | ஏதேனும் போர், படையெடுப்பு, சிவில் கலவரம் அல்லது அது போன்ற பிற நிகழ்வுகளின் காரணமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் மரணத்திற்கு எந்த இழப்பீடும் வழங்கப்படாது. |
| சட்டவிரோத செயற்பாடுகள் | சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் போது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மரணம் ஏற்பட்டால் எந்த இழப்பீடும் வழங்கப்படாது. |
| தகவல்களை வெளியிடாமை | பிரேரணைப்பத்திரம், மருத்துவ அறிக்கைகள் அல்லது உரிமைக்கோரல் ஆவணங்களில் முக்கியமான தகவல்களை வெளிப்படுத்தத் தவறினாலோ அல்லது அலட்சியப்படுத்தினாலோ எந்த உரிமைக்கோரல் தொகையும் செலுத்தப்பட மாட்டாது. |

விலக்குகள் பற்றிய மற்றும் அடிப்படைக் காப்பீடுகள் மற்றும் ஒவ்வொரு மேலதிக அனுகூலத்தின் கீழும் இழப்பீடு செலுத்தப்படாமல் போகக்கூடிய நிகழ்வுகள் பற்றிய முழு விபரங்களுக்கு தயவுசெய்து காப்புறுதி ஆவணத்தைப் பார்க்கவும்.

## 5 கட்டுப்பணம் செலுத்தும் முறை

இந்தத் திட்டம் தொடர் கட்டுப்பணம் செலுத்தும் முறையில் வழங்கப்படுகிறது. காப்புறுதிப்பத்திரதாரர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளபடி கட்டுப்பணம் செலுத்தும் கால விருப்பத் தெரிவுகள் வழங்கப்படுகின்றன:

| | | | |
|---|---|---|---|
| மாதாந்தம் | காலாண்டு | அரையாண்டு | வருடாந்தம் |

## 6 நான் ஏன் ஒரு நியமத்தரை (பயனாளியை) நியமிக்க வேண்டும்?

Your choice, protected

உங்கள் தெரிவு பாதுகாக்கப்படும்

மரணம் ஏற்பட்டால், அனுகூலங்கள் நேரடியாக நீங்கள் தேர்ந்தெடுத்த நபர்களை சென்றடையும் - இதில் எந்த சந்தேகமும் கிடையாது.

உரிமைக்கோரல்கள் விரைவாக செலுத்தப்படும்

தேவையற்ற தாமதங்களையும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கான செலவுகளையும் குறைக்கிறது.

பராயமடையாத சிறுவர்கள்

நீங்கள் ஒரு பிள்ளையை நியமித்து, அவர் பராயமடையும் வரை அனுகூலங்களை நிருவகிக்க நம்பகமான ஒரு முதியவரைப் பெயரிடலாம்.

தொடந்து புதுப்பித்துக் கொள்ளுங்கள்

உங்கள் தனிப்பட்ட சூழ்நிலைகள் மாறும் போதெல்லாம் பயனாளி நியமனத்தை மறுபரிசீலனை செய்யுங்கள்.
**(மேலதிக விபரங்களுக்கு காப்புறுதிப்பத்திர அட்டவணை இலக்கம் 02 விடய இலக்கம் 09 ஐப் பார்க்கவும்)**

### காப்புறுதிப்பத்திரத்தை உரிமைசாட்டல்

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தை உரிமைசாட்டுபவர் உரிமைசாட்டலை சட்டபூர்வமாக பதிவுசெய்வதற்காக உரிமைசாட்டல் குறித்த சட்டபூர்வ எழுத்துமூல அறிவிப்பை அசல் காப்புறுதி ஆவணத்துடன் உரிய படிவத்தை கம்பனியில் தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். ஓர் உரிமைசாட்டலைப் பதிவுசெய்யும் போது அதன் செல்லுபடியாகும் தன்மை அல்லது சட்டபூர்வ விளைவு குறித்து கம்பனி எந்தவொரு ஒப்புதலையும் அளிக்கவோ அல்லது எந்தவொரு கருத்தையும் தெரிவிக்கவோ மாட்டாது.

## 7 துல்லியமான தகவல் ஏன் முக்கியமானது

(மேலதிக விரங்களுக்கு காப்புறுதிப்பத்திர அட்டவணை இலக்கம் 01, விடய இலக்கம் 13 மற்றும் 14 ஐப் பார்க்கவும்)

உங்கள் ஆயுள் காப்புறுதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் போது வழங்கப்படும் அனைத்து தகவல்களும் உண்மையானதாகவும், துல்லியமானதாகவும், முழுமையானதாகவும் இருக்க வேண்டும்.

காப்புறுதிப்பத்திர அட்டவணையிலோ அல்லது பிரேரணைப்பத்திர விபரங்களிலோ உள்ள தகவல்களில் ஏதேனும் தவறுகள் இருப்பதை நீங்கள் கண்டறிந்தால், உடனடியாக எங்களுக்கு அறிவிக்கவும்.

**உங்கள் தொடர்பு இலக்கங்கள் மற்றும் முகவரி – தவறாமல் எங்களுடன் தொடர்பில் இருங்கள்**
உங்கள் தொடர்பு இலக்கமும் முகவரியும் எங்களுக்கு மிகவும் முக்கியமானவை. உங்களின் தற்போதைய தொடர்பு இலக்கமும் முகவரியும் இல்லாமல் எந்தவொரு சேவை வழங்குவது குறித்தும் எங்களால் உங்களைத் தொடர்பு கொள்ள இயலாது. ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் உடனடியாக எற்ங்களுக்குத் தெரிவிக்கவும்.

### 7.1 முக்கியமான தகவல்களை வெளிப்படுத்துவதில் காப்புறுதிதாரரின் கடமைகள்

- பிரேரணைப் படிவத்தில் நீங்கள் முழுமையான மற்றும் துல்லியமாக தகவல்களை வழங்க வேண்டும்.
- காப்புறுதிக் கம்பனி கோரும் தேவையான அனைத்து ஆதார ஆவணங்களையும் நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
- கொள்வனவு செய்த பின்னர் காப்புறுதி ஆவணத்தை வாசித்து புரிந்து கொள்ள வேண்டும்.
- கட்டுப்பணங்கள் அங்கீகரிக்கப்பட்ட வழிகள் மூலம் உரிய நேரத்தில் செலுத்தப்பட வேண்டும்.
- காப்புறுதி விதிமுறைகளின்படி பயனாளிகளை நியமிக்கவும்.

## 7.2 உரிமைக்கோரலை சமர்ப்பிக்கும் போது காப்புறுதிதாரரின் கடமைகள்

- உரிமைக்கோரல் எழுந்தால் அது பற்றி உடனடியாக கம்பனிக்கு அறிவிக்கவும்.
- பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களை உரிய நேரத்தில் சமர்ப்பிக்கவும்.
- துல்லியமான உரிமைக்கோரல் தகவல்களை வழங்கவும்.
- கோரப்படும் மருத்துவ அறிக்கைகள் அல்லது ஆதாரங்களை கம்பனியிடம் வழங்கவும்.
- அசல் காப்புறுதி ஆவணத்தை சமர்ப்பிக்கவும் (மரணம் தொடர்பான உரிமைக்கோரலின் போது மட்டும்)
- உரிமைக்கோரலுக்கான அனைத்து காப்புறுதிப்பத்திர விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் பின்பற்றவும்.

## 8 உரிமைகோருவது எப்படி?

### உரிமைகோரல் செயன்முறை

படிமுறை 1 – உரிமைகோரலுக்கான நிகழ்வு ஏற்பட்டவுடன் அது குறித்த தகவலை முடிந்தவரை விரைவில் எங்களுக்கு அறிவிக்கவும்.

படிமுறை 2 – உரிமைக்கோரல் பிரிவால் கோரப்படும் ஆவணங்களை சமர்ப்பிக்கவும், அவையாவன:

- உரிமைக்கோரல் படிவம்
- காப்புறுதிப்பத்திர ஆவணம் - மரண உரிமைக்கோரலுக்கு மட்டும்
- பொலிஸ் அறிக்கை – எல்லா உரிமைக்கோரலுக்கும் கட்டாயமில்லை
- அசல் நோய் நிருணய அட்டை/ கிளினிக் புத்தகம் மற்றும் மருத்துவ அறிக்கைகள்
- பொருந்தக்கூடிய பிற ஆவணங்கள் (உதா: மரணவிசாரணை அறிக்கை, இறுதியாக சிகிச்சையளித்த மருத்துவரின் அறிக்கை, தனிப்பட்ட மருத்துவர் அறிக்கை)

படிமுறை 3 – நாங்கள் உங்கள் உரிமைக்கோரலையும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையும் மதிப்பாய்வு செய்து தேவைப்பட்டால் மேலதிக தகவல்களைக் கோருவோம்.

படிமுறை 4 – உறுதி செய்யப்பட்டதும், காப்புறுதித் தொகையானது காப்புறுதிப்பத்திர விதிமுறைகளின்படி காப்புறுதி செய்யப்பட்டவர், நியமத்தர், அல்லது உரிமைசாட்டப்பட்டவருக்கு வழங்கப்படும் - அல்லது, உரிமைக்கோரலை நிராகரித்து அதற்கேற்ப அதற்கான காரணம் அறிவிக்கப்படும்.

உரிமைக்கோரல் எப்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது குறித்த மேலதிக விபரங்களுக்கு காப்புறுதி ஆவணத்தின் 02 ஆம் பக்கத்தைப் பார்க்கவும் (உரிமைக்கோரல் செயன்முறை தொடர்பான காலக்கெடு பற்றி அறிய வாடிக்கையாளர்கள் கோப்லை.்.ப் இணையதளத்தில் உள்ள கம்பனி சாசனத்தைப் (Charter) பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## 9 முறைப்பாடுகளையும் குறைகளையும் நாங்கள் எவ்வாறு கையாளுகிறோம்?

கோப்லை.்.ப் இன்சூரன்ஸ் லிமிடட்டில் உள்ள நாம் காப்புறுதிப்பத்திரத்தை வழங்க முன்னரும் பின்னரும் வாடிக்கையாளர்களுக்கு திருப்திகரமான சேவை அனுபவத்தை வழங்குவதில் உறுதியாக உள்ளோம்.

### முறைப்பாடுகளை உள்வாரியாக நாங்கள் கையாளும் விதம்

| படிமுறை 1 | படிமுறை 2 | படிமுறை 3 |
|---|---|---|
| உங்கள் முறைப்பாடுகளை நாம் ஏற்றுக்கொள்வோம் | உங்கள் முறைப்பாடுகளை நாம் மதிப்பாய்வு செய்வோம் | தீர்வுகளை அறிவிப்போம் |

## 9.1 முறைப்பாடுகளைச் செய்யும் வழிமுறைகள்

வாடிக்கையாளர்கள் தங்கள் முறைப்பாடுகளை அல்லது குறைகளை கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்பாடல் முறைகள் மூலம் சமர்ப்பிக்கலாம்:

| | |
|---|---|
| | தொலைபேசி: 011-2556567-70 / 011-2151600 (நீடிப்பு. 430 / 407) வாட்ஸ்அப்: |
| | நேரில்: முறைப்பாடுகள் முகாமை அதிகாரி, கோப்லை.்.ப் இன்சூரன்ஸ் லிமிடட் |
| | கடிதம் மூலம்: முறைப்பாடுகள் முகாமை அதிகாரி, கோப்லை.்.ப் இன்சூரன்ஸ் லிமிடட், கோப் ஹவுஸ், இலக்கம்: 455, காலி வீதி, கொழும்பு 03 அல்லது அதன் ஒரு கிளைக்கு |
| | மின்னஞ்சல்: inquiry.life@coopinsu.com |
| | இணையத்தளம்: www.cooplife.lk/help (Customer complaint |

## 9.2 மேன்முறையீட்டு செயன்முறை

முறைப்பாடுகளைக் கையாளும் அதிகாரி வழங்கிய முடிவில் உங்களுக்கு திருப்தி இல்லை என்றால், நீங்கள் 30 நாட்களுக்குள் பின்வருபவருக்கு மேன்முறையீடு செய்யலாம்:

**திரு. பிரசன்ன சூரியாரச்சி**
முகாமைப் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி,
கோப்லை.்.ப் இன்சூரன்ஸ் லிமிடட், கொழும்பு 03
மின்னஞ்சல்: md.life@coopinsu.com

## 9.3 வெளிவாரியான தீர்மானம்

கம்பனியின் மட்டத்தில் வழங்கப்பட்ட முடிவில் இன்னும் நீங்கள் திருப்தியடையவில்லை என்றால், பின்வரும் நிறுவனங்களுடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்:

| இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு | இலங்கை காப்புறுதி ஒம்புட்ஸ்மன் |
|---|---|
| 11 ஆம் மாடி, கிழக்கு கோபுரம்,<br>உலக வர்த்தக மையம், கொழும்பு 01<br>தொலைபேசி: 011-2396184-9 / 011-2335167<br>மின்னஞ்சல்: investigation@ircsl.gov.lk | இல. 143ஏ, வஜிர வீதி, கொழும்பு 05<br>தொலைபேசி: 011-4528671 / 011-2505542<br>மின்னஞ்சல்: info@insuranceombudsman.lk |

### 9.4 நீதிமன்ற நடவடிக்கை (மாற்று தகராறு தீர்வு - ADR )

பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் இருந்தால் மேற்கண்ட நடவடிக்கைகளை நிறைவு செய்த பின்னர் நீங்கள் இலங்கையின் மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் சட்ட நிவாரணம் தேடலாம். நீதிமன்றத்தின் எந்தவொரு தீர்ப்புக்கும் கம்பனி இணங்கி நடக்கும்.

## நினைவில் கொள்ள வேண்டிய சில விடயங்கள்

### கட்டுப்பணம் செலுத்தும் விருப்பத்தெரிவு

(மேலதிக விபரங்களுக்கு காப்புறுதி ஆவணத்தின் 2 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்)

- ► கோப்லை.்.ப் தலைமை அலுவலகம், (60) சேவை நிலையங்கள் அல்லது (50) கோப்லை.்.ப் கிளைகள் வழியாக
- ► பணம் அல்லது காசோலை மூலம், காப்புறுதிப்பத்திர / பிரேரணைப்பத்திர இலக்கம்
- ► மொபைல் மூலம் பணம் செலுத்துதல் (Ez Cash / m-Cash)
- ►இணையவழி / கடனட்டை / டெபிட் அட்டை மூலம் பணம் செலுத்துதல்
- ► வங்கி / கடனட்டை நிலையான கட்டளை மூலம்
- ► கோப்லை.்.ப் இணையத்தளத்தின் ஒன்லைன் கட்டண நுழைவாயில் (portal) வழியாக (கடனட்டை மூலம் மட்டும்)
- ► சிங்கர் கிளைகள் மற்றும் காகிள்ஸ் .்.புட்சிட்டி மூலம்

### எனது காப்புறுதிக்கு எவ்வளவு காலம் நான் பணம் செலுத்த வேண்டும்?

எங்கள் காப்புறுதிப்பத்திர அட்டவணை உங்களின் காப்புறுதிப்பத்திரம் மற்றும் கட்டுப்பண விதிமுறைகளைக் காட்டுகின்றது. உங்கள் காப்புறுதிப்பத்திரத்தை செயற்படும் நிலையில் வைத்திருக்க கட்டுப்பணங்களை சரியான நேரத்தில் செலுத்தவும். உதவிகள் தேவைப்பட்டால் உங்கள் கிளை, விற்பனை உத்தியோகத்தர் அல்லது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**⚠ முக்கிய குறிப்பு**

காப்புறுதி திட்டம் பற்றிய தகவல் ஆவணத்தின் (IPID) ஊடாக அடிப்படைக் காப்பீடு மற்றும் மேலதிகக் காப்பீடுகள் (ஏற்புடையதாகுமாயின்) மற்றும் சான்றிதழின் முக்கியமான இலட்சணங்கள் பற்றிய ஒரு சுருக்கத்தை வழங்குவதே நோக்கமாகும் என்பதுடன், அது பரிபூரணமான தகா.்.புல் சான்றிதழ் அல்ல என்பதைக் கவனிக்க. இந்தச் சான்றிதழுக்கு ஏற்புடைய அனைத்து உரிமைக்கோரல்கள் மற்றும் கொடுப்பனவுகள் சான்றிதழில் மற்றும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள், நிபந்தனைகள், விலக்களிப்புகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டிருக்கும். செயற்பாட்டாளரால் எந்தவொரு உரிமைக்கோரலும் செலுத்தப்படுவது சான்றிதழின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருந்தால் மாத்திரமேயாகும்.

### கம்பனியைத் தொடர்பு கொள்ளும் முறை

| தொலைபேசி | வாட்ஸ்அப் | மின்னஞ்சல் | இணையத்தளம் |
|---|---|---|---|
| 011 2556 567 | 0711 591 111 | info.life@coopinsu.com<br>inquiry.life@coopinsu.com | mailto:info.life@coopinsu.com www.cooplife.lk |